# பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்காகச் சரியான பீடைமுகாமை உத்திகளைத் திட்டமிடுவார்



e தக்சலாவ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தேர்ச்சி 1.0

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்காகச் சரியான பீடைமுகாமை உத்திகளைத் திட்டமிடுவார்

## தேர்ச்சி மட்டம் 1.1

பீடைகளை வகைப்படுத்தி அப்பீடைகள் காரணமாக பயிர்ச்செய்கை மீது எற்படும் தாக்கங்களை நுணுகியாய்வார்

### பீடை

மனிதனுக்கோ மனிதனால் வளர்க்கப்படும் விலங்குகளுக்கோ பயிரிடப்படும் பயிர்களுக்கோ களஞ்சிய விளைபொருள்களுக்கோ மனிதனால் பயன்படுத்தப்படும் யாதேனும் பொருளுக்கோ பொருளாதார ரீதியில் சேதம் விளைவிக்கும் யாதேனும் அங்கி அல்லது அங்கிக் கூட்டம் பீடை எனப்படும்.

**பீடைக் கூட்டங்களின் வகைகள்**

1. விலங்குப் பீடைகள்
2. களைகள்
3. நோயாக்கி நுண்ணங்கிகள்

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## விலங்குப் பீடைகளால் பயிர்ச்செய்கையில் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள்

- நோய் காவிகளாகத் தொழிற்படல்
- களஞ்சிய விளைபொருள்களைத் தாக்குவதால் அவற்றின் தரம் குன்றுதல்
- ஒளித்தொகுப்பு இழையங்கள் அழிக்கப்படுவதால் பயிர் விளைச்சல் குறைவடைதல்

## களை

- தாவர போசணை, நீர், இடவசதி, ஒளி போன்றவற்றுக்காகப் பயிர்களுடன் போட்டியிட்டு, அவற்றின் இருப்புக்குத் தடங்கல்களை ஏற்படுத்தும் தாவரங்கள் களைகள் எனப்படும்.
- தேவையற்ற இடத்தில் வளரும் எந்தவொரு தாவரமும் களை எனப்படும்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயிர்செய் நிலத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டியனவெனக் கருதப்படும் எந்தவொரு தாவரமும் களை எனப்படும்.

## களைகள் காரணமாகப் பயிர்ச்செய்கையில் ஏற்படும்

- **ஒளி, இடவசதி, போசணைப் பதார்த்தங்கள் ஆகியவற்றுக்காகப் போட்டியிடுவதன் விளைவாகப் பயிர்களின் வளர்ச்சி குன்றுவதால் விளைச்சல் குறைவடைதல்**
- **பயிர் விளைபொருளின் தரம் குறைவடைதல்**
- **நோயாக்கி நுண்ணங்கிகள் காரணமாகப் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்**
- **பயிர்கள் நோய்களுக்கு ஆளாதல்**
- **பயிர்களில் உடற்றொழிற்பாடுகள் சீராக நிகழாமை.**

## பீடை நிலைமை தோன்றுவதற்கான காரணங்கள்

- மனிதனாலாக்கப்பட்ட சூழலில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக இயற்கையான பயிர்க் குடித்தொகைகளை அப்புறப்படுத்துதல் காரணமாக சூழலில் இயற்கைச் சமநிலையை ஏற்படுத்தும் அங்கிகளின் வாழிடங்கள் இல்லாதொழிதல்
- உயிர்ப்பல்வகைமை குறைவடைதலும் இயற்கை எதிரிகள் குறைவடைதலும்
- ஒரு தனிப்பயிரை அல்லது தெரிவு செய்த ஒரு சில பயிர்களை மாத்திரம் பயிர்செய்தல்
- மீண்டும் மீண்டும் ஒரே பயிரைச் செய்கை பண்ணுதல்

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணிணி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk